1987 மார்ச் 11]

(உ) கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மசோதாவையும் சேர்த்து மூவ் பண்ணி விடுங்கள். இரண்டையும் சேர்த்து உறுப்பினர்கள் விவாதிக்கலாம்.

(ஊ) வேளாண்மை பணி கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு*** (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 4/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு பற்றி இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தடவையும் முறையாகத் தேர்தல் நடத்தப்படாமல் தனி அதிகாரிகளை நியமிப்பதை ஜனநாயகத்திற்கே மாற்றமான ஒரு செயலாக நான் கருதுகிறேன்.

**1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

** 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.